HSS

# அரையாண்டுத் தேர்வு - 2024

10 - ஆம் வகுப்பு

# சமூக அறிவியல்

காலம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

I *அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.* 14 x 1 = 14

1. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கு வீசியது?
அ)கவாசாகி ஆ) டோக்கியோ இ) ஹிரோஷிமா ஈ) நாகசாகி
2. திருச்சிராப்பள்ளி சுதந்திரப் பிரகடனத்தை வெளியிட்டவர் யார்?
அ) மருது சகோதரர்கள் ஆ) பூலித்தேவர்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) கோபால நாயக்கர்
3. சோட்டாநாக்பூர் குத்தகைச் சட்டம் எந்த பின்னணியில் நிறைவேற்றப்பட்டது?
அ) கோல் கிளர்ச்சி ஆ) இண்டிகோ கிளர்ச்சி இ) முண்டா கிளர்ச்சி ஈ) தக்காண கலவரங்கள்
4. இந்தி எதிர்ப்பு மாநாடு எங்கே நடைபெற்றது?
அ)ஈரோடு ஆ) சென்னை இ) சேலம் ஈ) மதுரை
5. 1933 ஜனவரி 8 எந்த நாளாக அனுசரிக்கப்பட்டது?
அ)கோவில் நுழைவு நாள் ஆ) மீட்பு நாள்(டெலிவரன்ஸ் டே)
இ)நேரடி நடவடிக்கை நாள் ஈ) சுதந்திரப் பெருநாள்
6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு
அ)நர்மதா ஆ)கோதாவரி இ)கோசி ஈ) தாமோதர்
7. சேஷாசலம் உயிர்க்கோள பெட்டகம் அமைந்துள்ள மாநிலம்...........
அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரப் பிரதேசம் இ) மத்தியப் பிரதேசம் ஈ) கர்நாடகா
8. சணல் உற்பத்தியில் முன்னணியில் உள்ள மாநிலம் எது?
அ) மேற்கு வங்கம் ஆ) பீகார் இ) அசாம் ஈ) மேகாலயா
9. தமிழ்நாட்டில் அதிக பரப்பளவில் காடுகளைக் கொண்ட மாவட்டம் எது?
அ) தர்மபுரி ஆ) வேலூர் இ) திண்டுக்கல் ஈ) ஈரோடு
10. தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் டெல்டா.......
அ) காவிரி டெல்டா ஆ) மகாநதி டெல்டா இ) கோதாவரி டெல்டா ஈ) கிருஷ்ணா டெல்டா
11. மாநிலங்களவைக்கு தமிழ் நாட்டிலிருந்து எத்தனை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன?
அ) 39 ஆ) 40 இ) 85 ஈ) 18
12. சரியான கூற்றினை தேர்நதேடுக்கவும்.
i) மாநிலங்களவையின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 250
ii) இலக்கியம் , அறிவியல், கலை ,சமூகசேவை ஆகிய துறைகளில் சிறந்த அறிவு மற்றும் அனுபவம் பெற்ற கஉ நபர்களை மாநிலங்களவைக்கு குடியரசு தலைவர் நியமிக்கிறார்.
iii) மாநிலங்களவை உறுப்பினராவதற்கு ங0 வயதுக்குக் குறைவாக இருத்தல் கூடாது.
iv) மாநிலங்களவை உறுப்பினர்கள் நேராடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
அ) ii & iv சரியானவை ஆ) iii& iv சரியானவை
இ) I & iv சரியானவை ஈ) I, ii & iii சரியானவை
13. இந்தியா எப்போது டன்கல் திட்டத்தில் கையெழுத்திட்டது?
அ) 1984 ஆ) 1976 இ) 1950 ஈ) 1994
14. உலகளாவிய பொது வழங்க முறையை ஏற்றுக்கொண்ட ஒரே மாநிலம்.....
அ)கேரளா ஆ) ஆந்திர பிரதேசம் இ) தமிழ்நாடு ஈ) கர்நாடகா

II *ஏதேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் வினா எண்.28 -க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.* 10 x 2 = 20

15. முத்துத் துறைமுக நிகழ்வைப் பற்றி எழுதுக.
16. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூக தீமைகள் யாவை?
17. திருச்சிராப்பள்ளி பிரகடனத்தின் (1801) முக்கிய கூறுகளைத் தருக.
18. இந்திய விடுதலை போராட்டத்தில் அன்னிபெசன்டின் பங்களிப்பு யாது?
19. "வெப்ப குறைவு விகிதம்" என்றால் என்ன?
20. இந்தியாவில் காணப்படும் மண் வகைகளின் பெயர்களைப் பட்டியலிடுக.
21. தகவல் தொடர்பு என்றால் என்ன? அதன் வகைகள் யாவை ?
22. தமிழ் நாட்டின் முக்கிய பல்நோக்குத் திட்டங்களின் பெயர்களை கூறுக.

23. இந்தியாவில் செம்மொழிகள் எவை ?
24. உச்ச நீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை ?
25. சார்க் உறுப்பு நாடுகளைப் பட்டியலிடுக.
26. இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் பெயரை எழுதுக.
27. தமிழ் நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயர்களை எழுதுக.
28. தங்க மதிப்பீட்டு அளவு என்றால் என்ன?.

III *எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.* 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்பவுக.
(அ) ------ என்பது தொலைவிலிருந்தே எதிரிகளின் போர் விமானங்களைக் கண்டுபிடிப்பதற்கான ஒரு கருவி.
(ஆ) "ஒரு பைசா தமிழன்" பத்திரிக்கையைத் துவக்கியவர் -------
(இ) காந்தியடிகளின் அரசியல் குரு------ஆவார் .
(ஈ) முதன் முதலாக அச்சேறிய ஐரோப்பிய அல்லாத மொழி------ஆகும்.
(உ) கட்டபொம்மன்--------என்ற இடத்தில் தூக்கிலிடப்பட்டார்.
30. இரண்டாம் உலகப் போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
31. பெண்கள் மேம்பாட்டுக்கு 19 ஆம் நூற்றாண்டு சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பணிகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.
32. நீதிக்கட்சியின் தோற்றத்திற்கான பின்புலத்தை விளக்கி சமூக நீதிக்கான அதன் பங்களிப்பைச் சுட்டிக் காட்டவும்.
33. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றி விவரி.
34. இந்திய மண் வகைகள் ஏதேனும் ஐந்திணைக் குறிப்பிட்டு, மண்ணின் பண்புகள் மற்றும் பரவல் பற்றி விவரி.
35. தமிழ்நாட்டின் தோட்ட வேளாண்மை பற்றி விளக்குக.
36. இந்திய அரசியலமைப்பின் சிறப்புக் கூறுகளை விளக்குக.
37. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
38. நாட்டு வருமானத்தை கணக்கிடுவதற்கு தொடர்புடைய பல்வேறு கருத்துக்களை விவரி.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. சில நேர்முக மற்றும் மறைமுக வரிகளை விளக்குக.
41. கீழ்க்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1930 முதல் 1950 வரையிலான ஆண்டுகளுக்கு உட்பட்ட முக்கியமான நிகழ்வுகள் ஏதேனும் ஐந்தினை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களை குறிக்கவும்.
(i) ஜெர்மனி (ii) இத்தாலி (iii) ஜப்பான் (iv) ஹவாய் தீவு (v) இங்கிலாந்து

V *பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.* (1 x 8 = 8)

43. 1857 ஆம் ஆண்டின் கிளர்ச்சிக்கான காரணங்களைக் குறித்து விரிவாக ஆராயவும்.
(அல்லது) இந்திய விவசாயிகள் எதிர்கொள்ளும் முக்கிய சவால்களை விவரி.
44. *(அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.* (1 x 8 = 8)
(i) மவுண்ட் எவரெஸ்ட் (ii) வெப்பமண்டல பசுமைமாறாக் காடுகள்
(iii) தென்மேற்குப் பருவக்காற்று வீசும் திசை (iv) சணல் விளையும் பகுதி
(v) அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவு (vi) தேசிய நெடுஞ்சாலை NH-44
(vii) வண்டல் மண் (viii) கங்கை நதி (அல்லது)
(ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
(i) கோடியக்கரை (ii) பழவேற்காடு ஏரி (iii) மன்னார் வளைகுடா (iv) மேட்டூர் அணை
(v) பாம்பன் தீவு (vi) கரிசல்மண் பகுதி ஒன்று (vii) சதுப்பு நிலகாடுகள் பகுதி ஒன்று (viii) நெய்வேலி